நம் உயிர் நிகர்

# தமிழ்மொழியைச் செழிப்போடு வாழவைக்க வேண்டியது; உலகெங்கும் வாழும் அனைத்துத் தமிழர்களின் பொறுப்பு!

## உலகத் தாய்மொழி நாளையொட்டி – முதல்வர் மு.க,ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, பிப். 22 -**

**உலகத் தாய்மொழி நாளை யொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலை தளப் பதிவில் "நம் உயிர் நிகர் தமிழ் மொழியைச் செழிப்போடு வாழ வைக்க வேண்டியது உலகெங்கும் வாழும் அனைத்துத் தமிழர்களின் பொறுப்பு!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

தமிழே நீ வாழ்ந்திடு!

இன்று உலகத் தாய்மொழிகள் நாள்! "ஏராளமானோர் உயிர் கொடுத்துக் காத்த நம் உயிர்நிகர் தமிழ்மொழியை எத்தனை சிறப்புகள் சொல்லி அழைத்தாலும் "தமிழே" என்று அழைத்திடும்போது கிடைத் திடும் இன்பம் மகத்தானது."

தலைவர் கலைஞரின் இந்த வரிகளைப் பாடலாக்கிய அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். அவர்களுக்கு என் நன்றி!

நம் தமிழைக் காத்து - அதை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கொண்டு சேர்த்து, செழிப்போடு வாழவைக்க வேண்டியது உலகெங்கும் வாழும் அனைத்துத் தமிழர்களின் பொறுப்பு!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பத்தாண்டு அ.தி.மு.க. ஆட்சியில் செய்யப்பட்டதை விட

# அதிகமான மூலதனச் செலவு செய்தது 'திராவிட மாடல்' ஆட்சி!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் எ.வ.வேலு – புள்ளி விவரங்களுடன் விளக்கம்!



**சென்னை, பிப். 22 -**

**சட்டப்பேரவையில் இடைக் கால நிதிநிலை அறிக்கை மீதான விவா தத்தில் எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி கலந்துகொண்டு பேசுகையில், "மூலதனச் செலவு குறைவாக உள்ளது" என்று ஒரு உண்மைக்கு மாறான தகவலைத் தெரிவித் தார். அப்போது குறுக் கிட்டு விளக்கம் அளித்த பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, "பத்தாண்டுகள் அ.தி. மு.க. ஆட்சியில் செய்யப்பட்டதை விட திராவிட மாடல் ஆட்சியில் தான் மூலதனச் செலவுகள் அதிகம்" என்று ஆதாரங்களுடன் விளக்கம் அளித்தார்.**

அமைச்சர் குறிப்பிட்டதாவது :

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வருவாய் வந்திருக்கிறது செலவுவெல்லாம் செய்திருக் கிறீர்கள். ஆனால், மூலதனச்செலவு மிகக்குறைவாக இருக்கிறது என்ற அடிப்படையிலே ஒரு கருத்தை சொல்லியிருக்கிறார்கள். 20112012ல் முதல் முதலாக அப்போது அம்மையார் ஆண்டார்கள். அதற்கு பின்னால் தொடர்ந்து நீங்கள் ஆட்சி செய்திருக்கிறீர்கள். இடையில் இன்னொருவர் ஆட்சி செய்துவிட்டு, போய்விட்டார். ஆக, மூன்றுபேர் தொடர்ந்து அந்த ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது. 2011–2012 அன்றைக்கு அரசின் சார்பாக மூலதனச் செலவு என்பது 16 ஆயிரத்து 355ல் ஆரம்பித்து, கடைசியாக 2020 ஆம் ஆண்டு நிறைவடைகிறபோது 33 ஆயிரத்து 67 ரூபாய் ஆக பத்து ஆண்டு காலத்தில் கூட்டிப்பார்க்கிறபோது 2 இலட்சத்து 8 ஆயிரத்து 793 கோடி ரூபாய் பத்து ஆண்டு ஆட்சியில் மூன்றுபேர் ஆளுகிறபோது அதற்கான Capital Expenditure அவ்வளவுதான். மீண்டும் சொல்கிறேன் 2 இலட்சத்து 8 ஆயிரத்து 793 கோடி ரூபாய் பத்து ஆண்டிற்கு மூலதனச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த 5 ஆண்டு காலத்தில் இந்த 'திராவிட மாடல்' ஆட்சியில் 2 இலட்சத்து 15 ஆயிரம் கோடி ரூபாய் இன்றைக்கு மூலதனச் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் 5 ஆண்டு காலத்தில் 2 இலட்சத்து 15 ஆயிரம் கோடி ரூபாய் நாங்கள் செலவு செய்திருக்கிறோம். ஆனால் நீங்கள் 10 ஆண்டு காலத்தில் 2 இலட்சத்து 8 ஆயிரத்து 793 கோடி ரூபாய்தான் செலவு செய்திருக்கிறீர்கள் எனவே, உங்கள் ஆட்சியைவிட இந்த ஆட்சி மூலதனச் செலவு அதிகமாக செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் எ.வ. வேலு விளக்கம் அளித்தார்.

சேலம் சுஜாதா பயிற்சி வழங்கி சிறப்புரை! ஆவடியில் திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# வெல்லும் தமிழ் பெண்கள் பயிற்சி பாசறை கூட்டம்!

## மாவட்ட கழகச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை!



*திருவள்ளூர், பிப் 22-*

*திருவள்ளூர் மத்திய மாவட்டம் திமுக சார்பில் வெல்லும் தமிழ் பெண்கள் பயிற்சி பாசறை கூட்டம் இன்று 22 -02-2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஆவடி பட்டாபிராம் தண்டரை பகுதியில் உள்ள ஜெய் கிறிஸ் திருமணம் மண்டபத்தில் மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எனது தலைமையில் நடைபெறுகிறது*

*இதில் மாநில பிரச்சார குழு செயலாளர் சுஜாதா கலந்து கொண்டு பாசறைப் பயிற்சி வழங்குகிறார்கள்*

*கூட்டத்தில் பகுதிச் செயலாளர் ஜி.நாராயண பிரசாத் வரவேற்புரை ஆற்றுகிறார் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜி. எஸ்.சங்கீதா சீனிவாசன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் கு.தமிழ்செல்வி முன்னிலை வகிக்கிறார்கள்.*

*இந்நிகழ்ச்சியில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் நடுக்குத்தகை கே.ஜெ.ரமேஷ், தொகுதி பார்வையாளர்கள் பி.டி. சி. செல்வராஜ், நிவேதா ஜெசிகா. மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட துணை செயலாளர்கள் வி. ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்ரிஶ்ரீதரன், மாவட்ட பொருளாளர் பா. நரேஷ் குமார். பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ். கு.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி. குமார், ஜெ.மகாதேவன். எஸ். காஞ்சனாசுதாகர் , எஸ். சங்கர், மற்றும் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் செயலாளர்கள் மாவட்ட மகளிர் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக மகளிர் அணி மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் ஆவடி சட்ட மன்ற தொகுதி 499 பூவிருந்த வல்லி சட்ட மன்ற தொகுதி 452 பாக வாக்குச்சாவடி சார்ந்த வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரை மேற்கொள்வோர் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்*

*பொருள் பிப்ரவரி 23-ஆம் தேதி முதல் மார்ச் 8 வரை வெல்லும் தமிழ்ப் பெண்கள் - வீடு வீடாகப் பரப்புரை குறித்து என மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்*






வெல்லும் தமிழ் பெண்கள் ஸ்டாலின் மகளிர் படை செயல்திட்டத்தின் கீழ் பாக மகளிர் தலைவிகளுக்கான தேர்தல் பரப்புரை பயிற்சி கூட்டம் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி தலைமையில் துணை மேயர் கோ. காமராஜ் மண்டலத் தலைவர்கள் வே கருணாநிதி இ.ஜோசப் அண்ணாதுரை பகுதி கழகச் செயலாளர் த.ஜெயக்குமார் இ. எஸ் பெர்னார்ட் தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் தொகுதி பாக மகளிர் அணி ஒருங்கிணைப்பாளர் மாமன்ற உறுப்பினர் மதினா பேகம் பயிற்சி அளித்தார். தேர்தல் பரப்புரை குறித்து இ.கருணாநிதி எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். 700க்கு மேற்பட்ட மகளிர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



# தி.மு.க. இளைஞர் அணி

## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, கோவை மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**22.02.2026 ஞாயிற்றுக்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 10.00 மணி | நகராட்சி பேருந்து நிலையம் திறப்பு விழா | பொள்ளாச்சி, கோவை. |
| காலை 10.15 மணி | 'பொள்ளாச்சி நா.மகாலிங்கம்' சாலை திறப்பு விழா | திட்ட சாலை, பொள்ளாச்சி, கோவை. |
| காலை 10.30 மணி | பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழா | சர்க்கஸ் மைதானம் அருகில், பொள்ளாச்சி, கோவை. |
| காலை 11.15 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூலகம் திறப்பு விழா | அண்ணா குடியிருப்பு, உடுமலைப்பேட்டை, திருப்பூர். |
| காலை 11.45 மணி | திருப்பூர் தெற்கு மாவட்ட கழக அலுவலகம் திறப்பு விழா | பழநி சாலை, உடுமலைப்பேட்டை |
| மதியம் 12.00 மணி | குடிமங்கலம் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் திரு.கிரி அவர்களின் திருவுருவப்படம் திறப்பு விழா | திருப்பூர் தெற்கு மாவட்ட கழக அலுவலகம், பழநி சாலை, உடுமலைப்பேட்டை |
| காலை 12.15 மணி | கழக முன்னோடிகள் 1200 நபர்களுக்கு, பொற்கிழி வழங்கும் விழா | ஜி.வி.ஜி.கல்லூரி அருகில், பழநி சாலை, உடுமலைப்பேட்டை, திருப்பூர். |
| மதியம் 01.00 மணி | மடத்துக்குளம் ஒன்றிய முன்னாள் அவைத்தலைவர் திரு.வெங்கிடுசாமி அவர்களின் திருவுருவப்படம் திறப்பு விழா | மைவாடி, மடத்துக்குளம், திருப்பூர். |
| மதியம் 1.30 மணி | சூலூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பொன்முடி சாலை திறப்பு விழா | பஞ்சாயத்து அலுவலகம், சீரணி கலையரங்கம் அருகில், சூலூர், கோவை. |
| மாலை 4.00 மணி | மேற்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு | கணியூர் டோல்கேட், கருமத்தம்பட்டி, கோவை. |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18

நாள் : 21.02.2026

கலைஞர் 100 1924 - 2023



திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக

# வெல்லும் தமிழ் பெண்கள் வீடு வீடாக பரப்புரை செய்ய வேண்டும்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் சிறப்புரை!

*திருவள்ளூர் பிப் 22;-*

*திருவள்ளூர் கிழக்கு மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட நிர்வாகிகள் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன். எம்.எல்.ரவி. மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், வெ.அன்புவாணன். ஜி.ஸ்டாலின், ஏ.கே.சுரேஷ், பொதுகுழு உறுப்பினர்கள் பா.செ. குணாசேகர். பி.வெங்கடாசலபதி. பரிமளம் விஸ்வநாதன், ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்*

*இதில் மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கினர்*

*அப்போது பேசிய அவர் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை வெகு விமர்சையாக கொண்டாட வேண்டும்.*

*கழக தலைவர் முதல்வர் அவர்களின் அன்புக்கட்டளைக்கு இணங்க, திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள 2 சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கி உள்ள 671 வாக்குச்சாவடிகளிலும் நாளை மறுநாள் 23-ஆம் தேதி முதல் உலக மகளிர் தினமான மார்ச் 8-ஆம் தேதி வரை வெல்லும் தமிழ் பெண்கள் ஸ்டாலினின் மகளிர் படையினர் வீடு வீடாகச் சென்று திராவிட மாடல் அரசு செய்த அளப்பரிய சாதனைகளை விளக்கி பரப்புரை மேற்கொள்ள உள்ளனர்.*

*அதையொட்டி திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக வெல்லும் தமிழ் பெண்கள் வீடு வீடாக பரப்புரை ஒரு நாளைக்கு 15 முதல் 20 வீடு-களுக்கு பரப்புரை செய்ய வேண்டும். பரப்புரைக்கு செல்லும் முன்னர்அந்தந்த பூத் குழு-வில் உள்ள10 மகளிர் குழுவினரும் தலைமைக் கழகம் தந்துள்ள பேட்ஜை கட்டாயம் அணிந்து செல்ல வேண்டும். தலைமைக் கழகம் தந்துள்ள-டைரி மற்றும் வீடுகளில் ஒட்ட வேண்டிய ஸ்டிக்கர் உடன் எடுத்து செல்ல வேண்டும் என தெரிவித்தார்*

*வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழகத்தினர்கள் தலைமைக் கழகத்தால் அறிவிக்கும் வேட்பாளரை அதிகவாக்குவித்தியாசத்தில் வெற்றி பெற செய்திட இரவும் பகலும் பாராமல் பணியாற்றி வேண்டும்*

*கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் மார்ச் 8 தேதி அன்று நடைபெறும் கழகமாநாட்டில்திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதியிலிருந்து பெருந்திரளாக மாநாட்டில் பங்கேற்க வேண்டும்*

*தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1.31 கோடி மகளிர்களுக்கு வங்கிக்கணக்கில், பிப்ரவரி முதல் ஏப்ரல் வரையிலான முன்பணம் 3,000 மற்றும் கோடைக்காலச் சிறப்புத் தொகுப்பு 2,000 என மொத்தம் 5,000 வரவு வைத்துள்ளார்கள் இந்த மகிழ்ச்சியான திட்டத்தை அறிவித்து செயல்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக திமுக சார்பில் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்து கொள்கிறோம்*

*இதில் ஒன்றிய நகர பேரூர் செயலாளாகள் டி. கே.சந்திரசேகர். கி.வேணு ஆனந்த், மு.மணிபாலன், நா.செல்வசேகரன், ஆ.சத்தியவேலு, நா.பரிமளம், ஜான்பொன்னுசாமி, மு. முரளிதரன், ஆ.ராஜா, ஏ. ஆர்.டி.உதயசூரியன், வே. ஆனந்தகுமார், க.சு.ஜெகதீசன்.ஜி.ரவிக்குமார். அபிராமிகுமரவேல். இரா.அறிவழகன். பி.முத்து, க.சு. தமிழ்உதயன், நிர்வாகிகள் ராஜராஜேஸ்வரி, ஜி.பி. வெங்கடேசன், தனசேகரன், ஆறுமுகம், கோபி, எல்லாபுரம் ராஜேஷ், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள் .*



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனை கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் பல்வேறு ஆலோசனை வழங்கி சிறப்புரையற்றினார். உடன் மாநில மாவட்ட நிர்வாகிகள் சி.எச்.சேகர், வெ.அன்புவாணன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், எம்.எல்.ரவி, ஜி.ஸ்டாலின், ஏ.கே.சுரேஷ், பொதுகுழு உறுப்பினர்கள் பா.செ.குணாசேகர், பி.வெங்கடாசலபதி, பரிமளம் விஸ்வநாதன், மற்றும் ஒன்றிய, நகர, பேருர் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.